## தேனி தொகுதியில் கழக வேட்பாளர் மாபெரும் வெற்றி!

# தேனி வடக்கு மாவட்டப் பொதுமக்களுக்கு நன்றி!

## தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. நேரில் சந்தித்து தெரிவிக்கிறார்!

தேனி, ஜூன் 12 -

தேனி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி பின்வருமாறு:

நாள் :12.06.2024

மாலை 3.00 மணி அளவில் பெரியகுளம் நகரம்

மாலை 4.00 மணி வடுக பட்டி பேரூர் மாலை 4.30 மணி



தாமரைக் குளம் பேரூர்

மாலை 5.00 மணி தென்கரை பேரூர்

நாள் :13.06.2024

மாலை 4.00 மணி தேனி அல்லிநகரம்

மாலை 5.30 மணி கெங்குவார் பட்டி பேரூர்

மாலை 6.00 மணி தேவ தானப்பட்டி பேரூர்

14.06.2024

மாலை 4.00 மணி போடி நாயக்கனூர் நகரம்

மாலை 5.00 மணி மேல சொக்கநாதபுரம்

மாலை 5.30 மணி போடி மீனாட்சிபுரம்

மாலை 6.00 மணி பூதிப் புரம் பேரூர்

மாலை 6.30 மணி பழனி செட்டிபட்டி பேரூர்

மாலை 7.00 மணி வீர பாண்டி பேரூர் ஆகிய இடங்களில் தங்க தமிழ்ச்செல்வன் பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

## கோவையில் முப்பெரும் விழா!

# இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் வேண்டுகோள்!

இராமநாதபுரம், ஜூன் 12 -

ஜூன் 15ம் தேதிமாலை 4.00 மணியளவில் கோயம் புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர். சட்ட மன்ற உறுப்பினர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அது வருமாறு:



வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என “முப்பெரும் விழா” பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் இந்திய கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தெரிவித்துள்ளார்.

## கோவை - பொள்ளாச்சியில் கலைஞர் நூற்றாண்டு விழா!

கோவை, ஜூன் 12 –

கோவை தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் விழா மற்றும் தமிழகம் முழுவதும் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் 40/40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதை முன்னிட்டு பொள்ளாச்சி சுந்தரம் லே அவுட் தளபதி இல்லம் முன்பு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் தலைமையில் பொள்ளாச்சி நகர மன்ற துணை தலைவர் கௌதமன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளரும் நகர மன்ற உறுப்பினருமான பி.ஏ.செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் திருமலைராஜா வரவேற்புரையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை கழக சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி துவக்கிவைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆதிதிராவிட நலக் குழு துணை தலைவரும் நகர மன்ற உறுப்பினருமான மாணிக்கராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் மணிமாலா தென்றல், சண்முகபிரியா சதீஷ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சதீஷ், வட்ட செயலாளர் ஜெகதீஷ், லோகநாதன், லேத் சுப்பிரமணியம், மகேந்திரன், கௌதம், காய்கறி பாலன், இரும்பு மனோஜ், குமரன் நகர தம்பி, கோட்டாம்பட்டி நவீன், சபரி துரை, மாரிமுத்து, சுதீஸ் ராஜ்கோ, கோகுல் ராஜ்குமார் , சுபாஷ் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இறுதியில் வருகை தந்த அனைவருக்கும் வட்டச் செயலாளர் பூவை செல்வராஜ் நன்றி கூறினார்.



திருப்புவனம் வட்டம். மணலூர் அழகுமலர் பள்ளியில் மாணவர்களுக்கான ஆதார் சிறப்பு மையத்தை திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் துவக்கி வைத்தார் உடன் வட்டார கல்வி அலுவலர்கள் பால்பாண்டி, லதா தேவி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், விவசாய அணி துணைத் தலைவர் சேகர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மரவமங்கலத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு ஒன்றிய செயலாளர் யோக.கிருஸ்ணகுமார் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.உடன் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.



சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் 101வது பிறந்த நாளை முன்னிட்டு தலைவர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.ஜெயராமன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் நிர்வாகிகள் மார்கரெட்கமலா, திலகவதி கண்ணன், அழகு சுந்தரம் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## ஆவடி தான்யாவுக்கு நிதியுதவி!

திருவள்ளூர், ஜூன் 12-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியை அடுத்த வீராபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஸ்டீபன்ராஜ் சௌந்தர்யா தம்பதியினர். இவர்களின் மகள் தான்யா மூன்று வயது வரை சராசரி குழந்தையாக இருந்த தான்யாவின் கன்னத்தில் அரிய வகை முகச்சிதைவு நோய் ஏற்பட்டு நாளடைவில் பாதி முகத்தை சிதைக்கும் அளவிற்கு மாறியது. சிறுமிக்கு பல இடங்களில் சிகிச்சை அளித்து வந்த பெற்றோரால் ஒரு கட்டத்திற்கு மேல் பணம் புரட்ட முடியவில்லை.

இதையடுத்து சிறுமி தான்யா, ‘முதலமைச்சர் ஐயா, எனக்கு கன்னம் இப்படி இருக்குறதால யாருமே பேசமாட்டேங்கிறாங்க. எனக்கு நீங்க என் முகத்தை சரி பண்ணி தாங்க. எனக்கு உங்க மேல நம்பிக்கை இருக்கு’ என்று தொலைக்காட்சி வாயிலாக கோரிக்கை வைத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து சிறுமிக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யும் படி கடந்த ஆண்டு ஆவடி சா.மு.நாசர் எம்எல்ஏவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். இதையடுத்து பூந்த மல்லியை அடுத்த தண்டலத்தில் உள்ள சவிதா மருத்துவமனையில் முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுமி தான்யாவிற்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அப்போது மருத்துவமனைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று சிறுமியிடம் நலம் விசாரித்தார். மேலும் தொடர்ந்து சிறுமிக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. சிறுமியின் பிறந்த நாளுக்கு அவரது வீட்டுக்கு முதலமைச்சர் சென்று வாழ்த்தினார் . சிறுமியின் குடும்பத்தி னருக்கு அரசு ஒதுக்கீட்டில் வீடு வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார். அதற்கான பணிகள் நடந்து வருகிறது. அதன் பிறகு சிகிச்சை முடிந்து தற்போது சிறுமி தான்யா பள்ளிக்குச் சென்று வருகிறார்.

இந்த நிலையில் சிறுமி தான்யாவுக்கு இந்த ஆண்டு பள்ளி கட்டணம் 60 ஆயிரம் ரூபாய் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ வழங்கி நன்றாக படிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார் இதில் ஆவடி மாநகர கழக செயலாளர் சன்.பிரகாஷ், திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் மற்றும் சிறுமி பெற்றோர் இருந்தனர்.

# பள்ளி சீருடை வழங்கும் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 12 ?

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்கள் தலைமையில் பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தான ஆய்வு கூட்டம் தலைமைச் செயலகத்தில் 07.06.2024 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2024-2025-ஆம் ஆண்டிற்கு சமூக நலத் துறைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய இரண்டு இணை, பள்ளி சீருடை துணிகள் விநியோக முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். மேலும் கடந்த ஆண்டு சட்டமன்ற பேரவை அறிவிப்புகள் மீதான தொடர் நடவடிக்கை மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும், துணிநூல் துறையில் செயல்படுத்தப்படும் சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜவுளி நகரம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

2024-2025-ஆம் ஆண்டிற்கு சமூக நலத் துறைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய 237.36 இலட்சம் மீட்டர் துணிகளில் நாளது தேதி வரையில் 149.65 இலட்சம் மீட்டர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. சமூக நலத் துறைக்கு தினசரி துணிகள் விநியோகம் செய்யப்படும் அளவினை அதிகரித்து எதிர் வரும் 20.06.2024க்குள் இரண்டு இணைக்கான துணிகள் முழுமையாக வழங்கப்படும்.

பொங்கல் 2025க்கான வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்காக, சேலைகள் மற்றும் வேட்டிகளின் மாதிரியினை உற்பத்தி செய்து அதன் முழுவிலை பட்டியல் விவரத்துடன் அரசுக்கு அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்த நேரத்தில் மக்களை சென்றடையும் வகையில் நடவடிக்கைகள் மற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக்கூட்டத்தில் தர்மேந்திர பிரதாப் யாதவ், அரசு முதன்மை செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, இரா.ஆனந்தகுமார், மேலாண்மை இயக்குனர், கோஆப்டெக்ஸ், மா.வள்ளலார், துணிநூல் ஆணையர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் கல் குறிச்சி அரசுப்பள்ளியில் முதல்வரின் விலையில்லா நோட்டு பாடப்புத்தகங்களை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.வழங்கினார். இந்த நிலையில் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன்கென்னடி, மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதிலதா அண்ணாதுரை, துரை.ராஜாமணி, எம்.அண்ணாதுரை மற்றும் பள்ளி தலைமையாசிரியர் உள்ளார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை சாம்பசிவம்

**ஜூன் 12 (2016)**



வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் தொடக்கக் காலத்திலேயே ஆசிரியர் பணியை உதறிவிட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957–ல் பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவர்.

கே.வி.குப்பம் ஒன்றியச் செயலாளராக தொடர்ந்து 15 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

வேலூர் மாவட்ட ஊராட்சித் தலைவராகவும் – கீ.வ.குப்பம் ஒன்றிய பெருந்தலைவராகவும் – முருக்கம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா கைதியாகவும், அதற்கு முன்னர்1962–ல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி, அறிஞர் அண்ணாவுடன் வேலூர் சிறையில் இருந்தபோது, அண்ணாவால் “தாடிக்காரர்’என அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

**ஜூன் 12 (2020)**



தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**